## November 4, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வங்கதேசத்தில் வரும் பிப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலை, முன்னாள் பிரதமர் கலீதா ஜியா (80) தலைமையிலான வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி) வெளியிட்டது.
    i. தேர்தலில் கலீதா ஜியா 3 தொகுதிகளில் போட்டியிடவிருப்பதாகவும், நாடு கடந்த அவரின் மகன் தாரிக் ரஹ்மானும் ஒரு தொகுதியில் போட்டியிடுவார் எனவும் கட்சி அறிவித்துள்ளது. ஆட்சியில் இருந்து கடந்த ஆண்டு அகற்றப்பட்ட ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்கு தடை விதிக் கப்பட்டுள்ளதால், தேர்தலில் பிஎன்பி வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.
2. வடக்கு ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நில நடுக்கத்தில் 20 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
    i. மேற்கு-தென்மேற்கு நகரான குல்முக்கு 22 கி.மீ. தொலைவில் நள்ளிரவு 1 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.3 அலகுகளாகப் பதிவான இந்த நிலநடுக்கம் 28 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.
    ii. யூரேசியா மற்றும் இந்திய புவித் தகடுகள் ஒன்றுடன் ஒன்று உராயும் பகுதியில் அமைந்துள்ளதால், ஆப்கானிஸ்தானில், குறிப்பாக ஹிந்துகுஷ் மலைத் தொடர் பகுதியில் நிலநடுக்கங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன.
3. எண்மக் கைது (டிஜிட்டல் அரெஸ்ட்) முறைகேடு மூலம் நாடு முழுவதும் ரூ.3,000 கோடிக்கு மேல் மோசடி நடைபெற்றிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இதுபோன்ற குற்றச் செயல்களை இரும்புக்கரம்கொண்டு அடக்க வேண்டியது அவசியம்' என உச்சநீதி மன்றம் வலியுறுத்தியது.
    i. அரசுத் துறை அதிகாரிகள் போல் தங்களை சித்தரித்து ஆடியோ மற்றும் விடியோ அழைப்புகள் மூலம் முதியவர்கள், பெண்கள் என பல்வேறு தரப்பினரைக் தொடர்புகொண்டு அவர்களை அச்சுறுத்தி இணைய வழியில் பணம் பறிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.
4. தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத்தின் 12- ஆவது வாரிய கூட்டம், வனம் மற்றும் காதித்துறை அமைச்சரும், வாரிய தலைவருமான ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.
    i. இக்கூட்டத்தில் தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை (திருத்த) விதிகள், புதிய உயிரிப்பல்வகைமை பாரம்பரிய தலங்களை அறிவிக்கை செய்தல் மற்றும் அறிவிக்கை செய்யப்பட்ட தலங்களைப் பாதுகாத்தல் உள்ளிட்டவை குறித்து அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆலோசனை மேற்கொண்டார்.
    ii. மேலும், வேளாண் உயிரி பல்வகைமை தொடர்பான நடவடிக்கைகள், செஞ்சந்தனம் மர விற்பனை மூலம் பெறப்பட்ட அணுகுதல் மற்றும் பலன் பகிர்வு தொகைகளை பயனாளர்களுக்கு பகிர்வு செய்தல் ஆகியவை குறித்தும், உயிரிப்பல்வகைமை திருத்த சட்டத்தில் உள்ள அதிகாரிகளை நியமித்தல் மற்றும் தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத்தை மேம்படுத்துதல் தொடர்பாகவும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.
5. உலகளாவிய வர்த்தகத்தில் இந்தியாவின் போட்டியிடும் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கும் நோக்கில்,

ஏற்றுமதியாளர்களைப் பிரதமர் மோடி சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

i. புது தில்லியில் ஆடைகள், தோல், ரத்தினங்கள் மற்றும் ஆபரணம், கைவினைப் பொருள்கள், பொறியியல் மற்றும் கடல் உணவு துறைகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை பிரதமர் மோடி சந்தித்தார்.
ii. உலகளாவிய வர்த்தகத்தில் இந்தியாவின் போட்டியிடும் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க, இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
iii. இந்தியாவின் ஒரு சில துறைகளைத் தவிர, பெரும்பாலான துறைகளின் உற்பத்திப் பொருள்கள் மீது அமெரிக்கா 50 சதவீதம் இறக்குமதி வரி விதித்துள்ளது. இதனால் இயந்திரங்களை விட உடல் உழைப்பு மிகுந்த துறைகளுக்குப் பல்வேறு சவால்கள் ஏற்பட்டுள்ளன.
iv. உலகளாவிய வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு சுமார் 2 சதவீதமாக உள்ளது. கடந்த செப்டம்பரில் இந்தியாவின் ஏற்றுமதி 6.74 சதவீதம் வளர்ந்தது. அதேவேளையில், இறக்குமதியும் 16.6 சதவீதம் உயர்ந்தது. ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமானதால் வர்த்தகப் பற்றாக்குறை 31.15 பில்லியன் டாலராக (சுமார் ரூ.2.76 லட்சம் கோடி) அதிகரித்தது.

6. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் தனியார் துறையின் முதலீட்டை அதிகரிக்கும் வகையில் ஆராய்ச்சி, மேம்பாடுபாடு மற்றும் புத்தாக்கத் திட்டத்துக்கான ரூ.1 லட்சம் கோடி நிதியத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

i. தில்லியில் முதலாவது வளரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் புத்தாக்க மாநாட்டை தொடங்கிவைத்தபோது, இந்த நிதியத்தையும் அவர் தொடங்கிவைத்தார். மேலும், அறிவியல் துறையில் இந்தியப் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதாகவும் அவர் கூறினார்.
ii. "சிந்தனை, புத்தாக்கம், உத்வேகம்' என்ற கருப்பொருளில் மூன்று நாள்கள் நடைபெறும் இம்மாநாட்டில் கல்வித் துறை, ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழில்துறை, அரசுத் துறைகளில் இருந்து 3,000-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

7. பாகிஸ்தான், சீனா, ரஷியா, வடகொரியா ஆகிய நாடுகள் ரகசியமாக அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட்டு வருகின் றன. எனவே, அமெரிக்கா மீண்டும் அணு ஆயுத சோதனையில் ஈடுபடு வதில் தவறில்லை' என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.